<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண்.57/2022**

பெயர்: **முத்துச்சாமி** நாள்: 04.08.2026

வா.சா.2 – 2-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

வா.சா.1 – முத்துச்சாமி - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை.

<u>2-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடக்க நேரம். 12:40</u>

எனக்கு வாதியை எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால், சுமார் 20 ஆண்டுகளாக தெரியும். வாதி எனக்கு உறவினரா என்றால், இல்லை பழக்கத்தின் அடிப்படையில் தெரியும். கிரைய ஒப்பந்த பத்திரத்தில் சர்வே எண்கள். 4/2H, 4/2I-ல் தலா 2 செண்ட் நிலங்களை கிரையம் பெறுவதற்கான கிரையம் ஒப்பந்தம் போடப்பட்டது என்றால், சர்வே எண்கள் எனக்கு ஞாபகமில்லை ஆனால் 2 சர்வே எண்களின் 4 செண்ட் நிலங்களை கிரையம் செய்வதாக ஒப்பந்தம் போடப்பட்டது. சர்வே எண். 4/ 2H அதன் செக்கு பந்தி விபரத்தில் அருண்வீட்டிற்கும் கிழக்கு என்று ஒப்பந்த பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், எனக்கு ஞாபகமில்லை. கிரைய ஒப்பந்த பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செக்குபந்தி விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால், செக்குபந்தி விபரம் எனக்கு தெரியாது ஆனால் 4 செண்ட் நிலம் விற்றது எனக்கு தெரியும். கிரைய ஒப்பந்த பத்திரத்தில் உள்ள செக்குபந்தி விபரங்களும் 2-ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்துகளின் செக்குபந்தி விபரங்களும் வெவ்வேறானவை என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. கிரையம் ஒப்பந்தம் செய்தது பற்றி எனக்கு தெரியாது என்றும் வாதி எனக்கு பழக்கமானவர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. வாதி கிரையம் ஒப்பந்தம் செய்த சொத்தை தான் 2-ம் பிரதிவாதி கிரையம் பெற்றார் என்று குறிப்பாக என்னால் சொல்லமுடியாது என்று சொன்னால், சரியல்ல. வாதி கிரையம் ஒப்பந்தம் செய்த சொத்தை தான் 2-ம் பிரதிவாதி வாங்கி கொண்டார். என்னிடம் காட்டப்படும் கிரைய ஒப்பந்த பத்திரத்தில் சர்வே எண். 4/2H-ற்கான செக்குபந்தி விபரத்தில் சர்வே எண் பிளேடால் அழிக்கப்பட்டு பேனாவில் வேறு சர்வே எண் எழுதப்பட்டுள்ளது என்றால், அது சரியாக தெரியவில்லை. 2-ம் பிரதிவாதியின் சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வாதியும்

1-ம் பிரதிவாதியும் கிரையம் ஒப்பந்த பத்திரத்தை போலியாக தயார் செய்வதற்கு நான் உதவியுள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. அதனால் தான் எனக்கு உண்மை தெரிந்தும் நான் மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இதேபோல் அ.வ.எண்.58/2022 வழக்கிற்காகவும் வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால், சரியல்ல. இரண்டு வழக்குகளிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் போலியாக தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால், சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை முடிந்த நேரம்.12:50PM</u>

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என்முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

ELAMATHI R

Digitally signed by ELAMATHI R
Date: 2026.08.04 15:48:24 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.